# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 21.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ்

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு



## ஐ.நா.செயலாளருக்கு உறுதியளித்தார் ஜனாதிபதி

காணாமல்போனவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் துரித நடவடிக்கைளை எடுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஐ.நா.வுக்கு வாக்களித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று ஐ.நா செயலாளர் நாய

02 ஆம் பக்கத்தில்...

## போலியான தகவல்களை நம்பாதீர்கள் கோரோனா தடுப்பூசியை ஏற்றுங்கள்

### கிழக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர்

போலியான தகவல்களை நம்பாமல், 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.தௌபீக் கேட்டுக் கொண்டார்.

தடுப்பூசி தொடர்பாக தவறான அபிப்பிராயங்களோடு சிலர் இன்னும் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாமல் இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்கென வழங்கப்பட்ட தடுப்பூசிகள் கணிசமான அளவு கிடைக்கப்பெற்று,ஒவ்வொரு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

30, 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கும்,முதலாவது தடுப்பூசி 100 சதவீதமும்,இரண்டாவது தடுப்பூசி 90 சதவீதமும் ஏற்றப்பட்டுள்ளது.

06 ஆம் பக்கத்தில்...

## மனித உரிமை பதிவுகளை இலங்கை அரசு பின்பற்றுகிறதா? ஆராய குழுவை நியமித்தது ஐரோப்பிய நாடாளுமன்றம்

ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய நாடுகளுக்கான சிறிலங்காவின் ஏற்றுமதிக்கு மேலும் வரிச்சலுகைகளை வழங்க அனுமதிக்கும் மனித உரிமை பதிவுகளை இலங்கை அரசு பின்பற்றுகிறதா என்பதை ஆராய ஐந்து பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

உயர்மட்ட குழு செப்டம்பர் 27ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதோடு, ஒக்டோபர் 5ஆம் திகதி வரை சிறிலங்காவில் தங்கியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச உயர்மட்டம், தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம், முதலாளிகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளை குறித்த குழு சந்திக்க உள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## 'உள்ளக பொறிமுறையொன்றின் கீழ் தீர்வு' புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி

உள்ளக பொறிமுறையொன்றின் கீழ் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குமாறு புலம்பெயர் தமிழர்களிடம், சிறிலங்கா அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## புலம்பெயர் அமைப்புகள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள சதித் திட்டம்

### லொஹான் ரத்வத்த தெரிவிப்பு

தான் குற்றம் புரியவில்லை என்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள சதித் திட்டமொன்றை அரங்கேற்றியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீது அரசியல் கைதிகளை அச்சுறுத்திய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவர் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் போதே, இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் குறைபாடுகளைக் கேட்டறிந்துகொள்வதற்காகவே தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து, உரையாடியதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் சிறைக்கு நான் சென்றதும் தமிழ் அரசியல் கைதிகளுடன் உரையாடியதும் உண்மை. இதன் போது தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்த்தேனே தவிர, அவர்களை ஒருபோதும் அச்சுறுத்தி சித்திரவதைக்கு உற்படுத்தவில்லை.

எனினும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் மூலமாக அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சதித் திட்டமொன்று அரங்கேறியுள்ளது.

இந்த விடயத்தை விசாரித்து, ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எந்தத் தீர்மானமும் எடுக்க முடியும். ஆனால், நான் குற்றவாளி என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

சிறைச்சாலைகள் தீப்பிடிக்கும் மிக மோசமான கட்டத்தில் இருக்கும்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஐ.நா செயலாளர் நாயகம்

இனங்களுக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல ஐக்கிய நாடுகள் சபையின் பூரண ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்க தயாராகவுள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா சபையின் தலைமையகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக மிகவும் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிட்டாலும் இந்து சமுத்திர வலயத்தில் இலங்கையின் பாரிய சமூக மற்றும் பொருளாதார விவகாரங்களை முன்னெடுத்துச் செல்லும் இலங்கையினால் அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என தாம் எதிர்பார்ப்பதாக ஐ.நா செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தில் இணைத்துக் கொள்ள நேர்முகப் பரீட்சை

(எச்.எம்.எம்.பர்ஸான்)

இளைஞர்களை இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் இதற்கான வேலைத்திட்டங்கள்

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
குறைந்த கட்டணத்தில் வீட்டுக்காப்புறுதி
3 Säule ஆயுள்காப்புறுதி
Im Rietpark 5, 8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


## 89 கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை ரஞ்சன் ராமநாயக்கவை ஏமாற்றிய அரசு

இலங்கை சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் 89 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

செப்டம்பர் 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட தேசிய சிறைக் கைதிகள் தினத்தையொட்டி, செப்டம்பர் 19 ஆம் திகதி இவர்களுக்கு விடுதலை வழங்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி சிறிய குற்றங்கள் தொடர்பில் தண்டனை வழங்கப்பட்டிருந்த கைதிகளே விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்

02 ஆம் பக்கத்தில்...


“சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero





Kamal GmbH
Kamal Kredit & Hypothek
கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
☎ 043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com


## இலங்கையில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு

இலங்கை சந்தையில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சந்தை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு இரண்டிற்குமே இதுவரையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென நுகர்வோர் தெரிவித்துள்ளனர். நாட்டில் டொலர்கள் பற்றாக்குறை மற்றும் வணிக வங்கிகளால் கடன் கடிதங்கள் வழங்கப்படாததால் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியவில்லை என லாப்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனங்கள் இரண்டுமே எரிவாயு விலையை அதிகரிப்பதற்காக அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் சர்வதேச ஆய்வு மாநாடு - 2021

இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பு தனது வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டினை இணைய வழியாக 22.09.2021 அன்று நடாத்துவதென ஒழுங்குபடுத்தியுள்ளது. 'ஆராய்ச்சி வெளிப்பாட்டினை அதிகரிப்பதற்கான திறந்த பெறுகையும் ஆய்வு வெளியீடும்' என்பது மாநாட்டின் கருப்பொருளாகும்.

சமகால நிலையில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் எனும் துறையிலுள்ள கல்வியாளர்களின் ஆய்வு வெளியீட்டினை அதிகரித்தலில் கல்விசார் வெளியீடு மற்றும் திறந்த பெறுகை தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகள், தீர்வுகள் சம்பந்தமாக விவாதித்தல் - கலந்துரையாடல் மற்றும் அறிவைப் பகிர்தல் என்பனவற்றிற்கு ஒரு தளமமைத்தல் இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மாநாட்டின் தலைவரும் இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் தலைவருமான கலாநிதி சம்மிக மல்லவராச்சி கூறுகையில் :-

தனிநபர் ஆராய்ச்சி, நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் இந்த முழு நாட்டினதும் ஆராய்ச்சி வெளியீடுகளை மேன்மைப்படுத்துவதில் நூலகங்கள் முக்கிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளன என்றார். கல்விசார் வெளியீடு என்பது விஞ்ஞான மற்றும் அறிவுடைச் சமூகங்களுக்கிடையில் ஆய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்கின்ற ஒரு வழிமுறை எனலாம்.

பொருத்தமானதும் தரமானதுமான தகவல்களை இலவசமாகப் பெற்று ஆய்வாளர்களுக்கு உதவி செய்வதில் கல்விசார் வெளியீடுகளின் உள்ளடக்கம் இருக்கின்றது என்பது இன்றைய உலகின் பொதுநிலையாகும்.

திறந்த பெறுகை என்பது ஆய்வாளர்களுக்கு மாத்திரமன்றி நிறுவனங்களுக்கும் ஆய்வின் வெளியீட்டினை அதிகரிப்பதில் மிகமுக்கிய நன்மைகளை வழங்குகின்றது. இதனாலேயே அதிக விளைவைப் பெறக் கூடியதாகவுள்ளது. எனவேதான் அவர்கள் 2021 இன் ஆய்வு மாநாட்டிற்கான கருப்பொருளாக இதனைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கின்றார்.

நூலக நிறுவனங்களின் சர்வதேசகூட்டமைப்பின் (IFLA) தலைவரான திருமதி பார்பரா லிஸ்சன், மனிதநேய விவகார நிலையத்தின் தலைவரான திரு ஜீவன் தியாகராஜா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் (NILIS) பணிப்பாளர் கலாநிதி பிரதீபா விஜயதுங்க என்போர் ஆய்வரங்க பிரதான பேச்சுக்களை வழங்குகின்றனர்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகரும் ஆய்வரங்க செயலாளருமான கலாநிதி முகமட் மஜீத் மஷ;றுபா :-

நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் சார் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை இணைய வழியில் முன்வைப்பார்கள் என கூறியுள்ளார்.

அனைத்து ஆய்வுக் கட்டுரைகளினதும் விரிவான ஆய்வுச் சுருக்கம் இலத்திரனியல் மற்றும் அச்சுமுறை தொகுப்புக்களாக வெயியிடப்படும்.

அத்துடன், ஆய்வு மாநாட்டின் முழு வெற்றியும் பின்வருவோரது பங்களிப்பிலும் தங்கியுள்ளது என்றார்.

திரு ஏ.டி.பி. குமார, இணையத்தள மற்றும் தொழிநுட்ப இணைத்தலைவர் - கே.எச்.ரி. அபேசேகர, வெளியீடுசார் இணைத் தலைவா - கலாநிதி சமன் இலங்கரத்ன, அனுசரணையாளர் சார் இணைத்தலைவர் - கலாநிதி ஆனந்த திஸ்ஸ,

நிதிசார் இணைத் தலைவர் - கலாநிதி ஆனந்த திஸ்ஸ, மாநாட்டின் இணைச் செயலாளர்களான - வெ. அழகரெத்தினம் மற்றும் மஞ்சுளா ராஜபக்ச, ஆலோசகர் குழு அங்கத்தவர்கள், இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் நிர்வாகசபை உறுப்பினர்கள், உபகுழுக்களின் அங்கத்தவர்கள் என்போராவார்.

இம்மாநாடு எதிர்காலத்தில் இலங்கை பல்கலைக்கழகங்களின் கல்விசார் வெளியீடுகளையும் ஆய்வ உருவாக்கத்தையும் அதிகரிப்பதற்கான வழியை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**ஆய்வரங்க செயலாளர்**
**கலாநிதி முகமட் மஜீத் மஷறூபா**

## காணாமல் போனவர்களுக்கு மரண

கம் அன்டோனியோ குட்ரஸை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது ஐ.நா. பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டாபய, நவம்பர் மாதத்திற்கு முன்னர் 15 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் முழுமையாக தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் காணாமல்போன நபர்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை வெகு விரைவில் முன்னெடுப்போம்.

மரண சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் துரித நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படும்.

தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பின் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க தயங்க மாட்டேன்.

மேலும், இலங்கையில் மீண்டுமொரு முறை பிரிவினைவாதம் உருவாக மாட்டாது என்று உறுதியளிக்க முடியும். மத அடிப்படைவாதம் தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கையைப் போன்றே ஏனைய அனைத்து நாடுகளும் விழிப்புடன் இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## மனித உரிமை பதிவுகளை இலங்கை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது உட்பட மனித உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதால் சிறிலங்காவிற்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இரத்து செய்யும் யோசனை உள்ளடங்கிய தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றியது.

மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டின் மஹிந்த ராஜபக்ச நிர்வாகத்தால் செயல்படுத்தப்படாததால் பெப்ரவரி 2010 இல் முன்னுரிமை வரி சலுகையான (ஜிஎஸ்பி பிளஸ்) இடைநிறுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச உடன்படிக்கைகளை செயற்படுத்துவது குறித்த உத்தரவாத்திற்கு அமைய, நம்பிக்கையின் அடிப்படையில், 201% மே மாதம் ஜிஎஸ்பி பிளஸ் மீண்டும் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றது. எனினும் இந்த சலுகையை சிறிலங்காவிற்கு தொடர்ந்து வழங்குவது குறித்து ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை ஆராயவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகம் மற்றும் நிலையான அபிவிருத்தி குறித்த சிரேஷ்ட ஆலோசகர் நிகோலஸ் ஜைமிஸ், ஐரோப்பிய வெளிவிவகார சேவை தெற்காசிய பிரிவு தலைவர் இயோனிஸ் ஜியோகாரகீஸ் ஆர்கிரோபொலோஸ், ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி வர்த்தக விருப்பத்தெரிவுகள் ஒருங்கிணைப்பாளர் கைடோ டொலரா, ஐரோப்பிய ஒன்றிய வேலைவாய்ப்பு, சமூக விவகாரங்களுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரிவுத் தலைவர் லூயிஸ் ப்ராட்ஸ், ஸ்ரீலங்கா மற்றும் மாலைத்தீவுக்கான ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கை சேவையின் அலுவலக அதிகாரி மோனிகா பைலெயிட் மற்றும் ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கை சேவை மனித உரிமைகள் கொள்கை அதிகாரி பவுலோ சல்வியா ஆகியோர் சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

## உள்ளக பொறிமுறையொன்றின் கீழ்

கலந்து கொள்ளவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நியூயோர்க் சென்றுள்ளார். இந்த நிலையில் நேற்றைய தினம் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரஸை சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவில் நீடித்துக் கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பிலும், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயம் குறித்தும் கலந்துரையாடிய போதே அவர் இந்த அறிவிப்பினை விடுத்துள்ளார்.

## புலம்பெயர் அமைப்புகள் அரசாங்கத்தை

போதே, தான் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்று, பின்னர் நிலைமைகளை முழுமையாக சீர்செய்தேன்''

என்று லொஹான் ரத்வத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் ஒரு பெண்ணுடன் மதுபோதையில் சிறைச்சாலைக்குச் சென்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும், அவை உண்மைக்குப் புறம்பானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைக்குள் செல்லும் போது ஆயுதங்களை மாத்திரமன்றி கையடக்கத் தொலைபேசியைக்கூட கொண்டுசெல்ல முடியாது என்றும், தான் துப்பாக்கி கொண்டு சென்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா விவகாரம் மற்றும் ஜனாதிபதியின் அமெரிக்க விஜயம் போன்றன இடம்பெறும் நிலையில் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் நெருக்கடிக்குள் தள்ளக்கூடாது என்பதற்காகவே பதவி விலகியதாகவும் லொஹான் ரத்வத்த குறிப்பிட்டுள்ளார்.

## 89 கைதிகள் பொது மன்னிப்பில்

டுள்ளது.

மஹர சிறைச்சாலையில் இருந்து 10 கைதிகளும், போகம்பரை சிறைச்சாலையில் இருந்து 7கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 5 கைதிகளும் இவர்களிடையே அடங்குவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போலியான தகவல்களை நம்பாதீர்கள்

தற்போது 20 வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, தடுப்பூசிகள் தொடர்ந்தும் கிடைக்கப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக அருகிலுள்ள தடுப்பூசி ஏற்றும் மையங்களுக்கு சென்று தடுப்பூசியினை கட்டாயம் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட மரணங்களில் 76 சதவீதமான மரணங்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களென அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. இரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் அவர்களின் பாதுகாப்பு அதிகமாக காணப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 3ஆம் மற்றும் 4ஆம் வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, டெல்டா வைரஸின் பரவலும், அதன் தாக்கமும் அதிகமான நோயாளர்களும், மரணங்களையும் சம்பவித்துள்ளன. ஆனால், இம்மாதத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை கனிசமான அளவு குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## இராணுவத்தில் இணைத்துக் கொள்ள

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடரில் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதில், 18-26 வயதுக்குட்பட்ட அனைத்து இன இளைஞர்களும் இணைந்து கொள்ள முடியும்.

அவ்வாறு இணைந்து கொள்ள வருகை தரும் இளைஞர்கள் தங்களின் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்குமாறு இராணுவ அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.




# ஈஸ்ட் லைட் தோண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு

ஈஸ்ட் லைட் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியன் குளம், குசனார் மலை, கித்துள் மற்றும் மயிலவெட்டுவான் ஆகிய கிராமங்களில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 200 வறிய குடும்பங்களுக்கு தலா 2170 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் பகிர்ந்து வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஈஸ்ட் லைட் தொண்டு நிறுவனத்தின் ஸ்தாபகர் ரவி கிருஷ்ணா, உதவிப் பிரதேச செயலாளர் பவதாரணி,





கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பை பிறப்பிடமாக கொண்ட அவுஸ்திரேலியாவில் வதியும் முகுந்தன் அவர்களின் நிதியுதவியில் இவ் உலருணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளரால் அரச நிதி மோசடி பிரதேசசபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். நசீர் குற்றச் சாட்டு

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளரால் அரச நிதி மோசடி செய்யப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதேசசபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். நசீர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாடு ஒன்று கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர், இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது, அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்படுவதற்கான பிரதான காரணம் கிண்ணியா பிரதேச சபையில் தொடர்ச்சியாக நிகழும் ஊழல் மிக்க செயற்பாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அங்கு நல்லாட்சியை ஆட்சியை ஏற்படுத்துவதே ஆகும்.

கிண்ணியா பிரதேச சபையில் மொத்தம் 16 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் அதில் பல கட்சிகளைச் சேர்ந்த % உறுப்பினர்கள் இணைந்து, இந்த ஊடகவியலாளர் மாநாட்டை நடத்துகின்றோம் என்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து கூறுகையில், தவிசாளரின் தலைமையில் சபையின் முறையான அங்கீகாரம் இல்லாமல் தொடர்ச்சியாக பல வேலைத் திட்டங்களுக்கு நிதி பெறப்படுகின்றது. இதன் மூலம் மக்களின் நிதி மோசடி செய்யப்படுவது தெரிய வந்துள்ளது.

இதன் அடிப்படையில் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட சோலைவெட்டுவான் மயிலப்பன் சேனை வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை. ஆனால் அது புனரமைப்பு செய்யப்பட்டதாக காட்டி 2 இலட்சத்து 90 ஆயிரத்து 577 ரூபா நிதி பெறப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை என்பதை அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட பல சமூக



அமைப்புக்கள் எமக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது என்று தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது, கிண்ணியா குறியாக்கேணி பாலத்தின் ஒரு பகுதி புணர்நிர்மானம் செய்யப்பட்டதாக கூறி 1 இலட்சத்து 53 ஆயிரத்து 125 ரூபா நிதி பெறப்பட்டு இருக்கின்றது. இருந்தபோதிலும் குறித்த பகுதி ஊழியர்கள் மற்றும் பொது மக்களால் செப்பனிடப்பட்டவையாகும். வேலையாட்கள் கூலி என்ற போர்வையில் அந்த நிதி பெறப்பட்டிருக்கின்றது.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாரி காலத்தில் நீர் தேங்கி நிற்கின்ற பிரதேசங்களில் இருந்து நீரை வெளியேற்றுவதற்காக 35 நீர் வழிந்தோடும் குழாய்கள் பொருத்தப் பட்டதாக கூறி 3 லட்சத்து 5 ஆயிரத்து 300 ரூபா பணம் பெறப்பட்டிருக்கிறது. எனினும் இந்த இடங்களில் இவ்வளவு எண்ணிக்கையான குழாய்கள் வைக்கப்படவில்லை. ஆனால் இதற்கான முழுப் பணமும் பெறப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத்தின் மாதாந்த வரவு செலவு திட்டத்தை காட்சிப்படுத்த வேண்டும். ஆனால் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரை சபையின் வரவு செலவுத் திட்டம் காட்சி படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்த அவர், இந்த ஊழல் மோசடிகளை நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஊராட்சிமன்ற அமைச்சருக்கும் தெரியப்படுத்துவது எமது கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம் ஆர் எம் அஸ்மி, ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களான எம். எம். தவ்பீக், ஏ. எச். எம். பாசித், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான எஸ்.எச். ஜிப்ரி, வை. எல். ஹன்சுலா மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உறுப்பினர் ஏ. எம். ரிபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மருதமுனை 65 மீட்டர் சுனாமி வீடுகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



மருதமுனை 65 மீட்டர் சுனாமி வீட்டுத்திட்டத்தில் எஞ்சியிருக்கும் வீடுகளை பொருத்தமான பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்த பேரழிவினால் மருதமுனை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென மருதமுனை மேட்டு வட்டப்பகுதியில் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட 65 மீட்டர் சுனாமி வீட்டுத்திட்டத்தில் எஞ்சியிருக்கும் சுமார் 6% வீடுகள் பல வருட காலமாக எவருக்கும் வழங்கப்படாமல் பாழடைந்து காணப்படுகின்றன. இந்நிலையில் இந்த வீட்டத்திட்டத்தை கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா நேற்று (19.09.2021) நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு இந்த வீடுகளை விரைவில் வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவித்தார். பாழடைந்துள்ள வீடுகளால் அருகிலுள்ள பொது மக்கள் எதிர்நோக்கும் சமூக பிரச்சினைகள் குறித்தும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ரி.எம்.முபாரிஸ், ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் பி.சர்மில் ஜஹான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் மேலும் 7 நபர்களுக்கு கோரோனா உறுதி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் ஞாயிறு அன்று ஏழு நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் இதுவரை 2035 கொரோனா தொற்றாளர்களாக பதிவாகியுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதனின் அறிக்கை தெரிவித்துள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் நாளாந்தம் வெளியிடும் கொரோனா தொடர்பான அறிக்கையில் மன்னார் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மேலும் 07 நபர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும்,

மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனையிலேயே இவ்களின் கொரோனா நோய் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இதுவரை மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 2035 கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளதுடன்,

இம் மாதம் (செப்ரம்பர்) கொரோனா தொற்றாளர்களாக 351 பேர் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும். கொரோனா தொற்றால் மரணித்தவர்கள் 23 ஆகவும் பதிவாகியுள்ளது.

இவ் மாதம் (செப்ரம்பர்) எடுக்கப்பட்ட 1024 பி.சீ.ஆர். பரிசோதனையுடன் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 28,784 பி.சீ.ஆர் பரிசோதனைகளிலேயே 2035 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கை தெரிவித்துள்ளது.








''வளர்ச்சியின் உச்சநிலை கல்வி'' எனும் நோக்கோடு நேற்று மட்/மமே/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் பாடசாலை நிருவாகம்,பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க உதயகுமார் கல்வி நிலையத்தினால் பாடசாலைக்கு பாதுகாப்பு இஇகூங கமராக்கள் உதயகுமார் ரஞ்சினி அவர்களால் வழங்கி வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்






# மன்னாரில் வினைத்திறன் செயற்பாட்டால் கோரோனா தாக்கம் குறைந்துள்ளது

## பணிப்பாளர் த.வினோதன்

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா தொற்றாளர்களும் மரணங்களும் குறைந்து காணப்பட்டு வருகின்றன. இதற்கு காரணம் கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டதும் மற்றும் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டமும் ஒரு காரணமாக அமைந்துள்ளன என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதத்தோடு இந்த மாதம் (செப்டம்பர்) கொரோனா தொடர்பாக ஒப்பிட்டு பார்க்கையில் இந்த மாதம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணமும் இதுவரை குறைந்து காணப்படுகின்றது.

இதற்கு இரு முக்கிய காரணங்கள் பிரதானமாக இருக்கலாம். அதாவது மன்னார் மாவட்டத்தில் வழங்கப்பட்ட கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்ட செயற்பாடுகள் வினைத்திறனாக இருந்தமையும் அத்துடன் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் இருந்தமையும் ஆகும்.

ஓகஸ்ட் மாதத்தில் மொத்தமாக 643 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டார்கள் இது ஒரு நாளைக்கு 20.% ஆக காணப்பட்டது இதில் இந்த மாதம் நேற்று வரை (19.09.2021) 351 ஆக காணப்படுகிறது அதாவது இது ஒரு நாளைக்கு 18.4 விகிதாசாரமாக காணப்படுகிறது

ஓகஸ்ட் மாதம் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பத்து மரணங்கள் இடம்பெற்றன. இதை நோக்கும்போது இவ் மரணங்கள் மூன்று நாளைக்கு ஒரு மரணம் என்று விகிதத்தில் காணப்பட்டது.

ஆனால் செப்டம்பர் மாதத்தில் இவ் மரண எண்ணிக்கை குறைவடைந்து அவை நான்காக காணப்படுகிறது. இது சுமார் 5 அல்லது 6 நாளைக்கு ஒரு மரணம் என்ற விகிதத்தில் குறைவடைந்து காணப்படுகிறது

கடந்த ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கும் போது எம்மால் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 6%. 66 சதவீதமாக முதலாவது தடுப்பூசியை வழங்கக் கூடியதாக இருந்தது பின் இவ் மாதம் (ஓகஸ்ட்) முடிவடையும்போது முதலாவது தடுப்பூசி %8.5 ஆகவும். இரண்டாவது தடுப்பூசி 64.62 வீதமானோருக்கு ஏற்றப்பட்டிருந்தது.

19.09.2021 அதாவது கடந்த ஞாயிறு வரை மன்னார் மாவட்டத்தில் இதுவரை முதலாவது தடுப்பூசி 92.% வீதமும். இரண்டாவது தடுப்பூசி %2.2 வீதமானோருக்கு ஏற்றப்பட்டுள்ளது.

ஆகவே மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று குறைவடைந்ததிற்கு மிகவும் பிரதானமாக இருப்பவை 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வினைத்திறனான முறையில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டதே காரணம் என்று கூறலாம்

அது தவிர தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டமும் இதில் பங்களிப்பு செய்துள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. வினோதன் இவ்வாறு தெரிவித்தார்


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# 140 வகை நுளம்புகளில் 2 நுளம்பினமே டெங்கை கடத்துகின்றன

## காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பிரசுரம்

(காரைதீவு நிருபர்)

இலங்கையில் தற்போது 140 வகையான நுளம்பு இனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஈடிஸ் ஈஜிப்டை மற்றும் ஈடிஸ் எல்பொபிக்டஸ் ஆகிய இரண்டு நுளம்பு வகைகள் மாத்திரம் டெங்கு நோய் வைரஸை பரப்புவதில் பங்களிப்புச் செய்கிறது. இவ் இரண்டு நுளம்பு வகைகளை அவற்றின் உடம்பில் காணப்படும் அடையாளம் காரணமாக இலகுவில் இனங் காணலாம்.

என்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் துண்டுப்பிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்புச்செய்துள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈடிஸ் நுளம்புகளின் வாழ்க்கைச் சக்கரத்தில் நீரியல் சந்தர்ப்பம் (முட்டை குடம்பி கூட்டுப்புழு) மற்றும் தரைச் சந்தர்ப்பம் (நிறைவுடலி) என்பன காணப்படுவதுடன் பெண் நுளம்புகள் நீருடன் கூடிய கொல்கலன்களில் நீர் மட்டத்திற்கு சற்று மேலே ஈரலிப்பான மேற்பட்டையில் முட்டையினை ஒட்டுவதுடன் அம் முட்டை நீருடன் மோதுகின்ற போது (மழை அல்லது வேறு ஒரு முறையினால் நீர் ஒன்றுசேர்தல் மூலம்) முட்டைகள் வெடித்து குடம்பி சந்தர்ப்பமாகமாறும்.

இந் நுளம்பு குடம்பிகள் நீரிலுள்ள கூட்டுப்பொருள் மற்றும் சிறிய நுண் அங்கிகள் என்பவற்றை உணவாக உட்கொண்டு 1ஆம் குடம்பி சந்தர்ப்பம் முதல் 4ஆம் குடம்பி சந்தர்ப்பம் வரை வருகின்றன. குடம்பியானது தேவையான உடல் பருமனை அடைந்ததன் பின்னர் மற்றும் தேவையான சக்தினைப் பெற்றுக்கொண்ட பின்னர் 4ஆம் குடம்பி சந்தர்ப்பத்திலிருந்து கூட்டுப்புழு) சந்தர்ப்பத்திற்கு மாற்றமடைகிறது. இவ் வழ்க்கைச்சக்கரத்தினைப் பூரணப்படுத்துவதற்காக 8-10 தினங்கள் செலவழிப்பதுடன் இது குடம்பி தனது உணவு உட்கொள்ளும் அளவு மீது தங்கியுள்ளது.

ஈடிஸ் நுளம்பின் முட்டைகளுக்கு பாதகமான சூழல் மற்றும் காலநிலை நிலைமைகளினைப் பொறுத்துக்கொண்டு பல மாதங்கள் சாகாமல் வாழ்வதற்குரிய விசேட ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் இதன் காரணமாக நுளம்பின் குடம்பி சந்தர்ப்பம் கூட்டுப்புழு சந்தர்ப்பம் மற்றும் நிறைவுடலி சந்தர்ப்பங்கள் அழிக்கப்பட்டாலும் நுளம்பின் முட்டைகள் தேங்கியுள்ள கொல்கலனொன்றில் நீர் விழுந்ததும் முட்டை வெடித்து மீண்டும் நுளம்புகள் பெருகக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது.

துரதிஷ்டவசமாக கொல்கலன்களில் ஒட்டியுள்ள முட்டைகளை அழிப்பதற்கான விசேடமான ஒரு முறைமை காணப்படவில்லை. நுளம்பின் வாழ்க்கைச் சக்கரத்தில் காணப்படும் இவ்வாறான இயல்புகளின் மாற்றங்களின் காரணமாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் டெங்கு நுளம்புகளை இல்லாதொழித்தலானது இலகுவான காரியமல்ல.

# கிண்ணியா துவரங்குளம் அடைமழையால் சேதம்

## மக்கள் புகார்

(இஃஜாஸ் ஏ பரீட்)



திருகோணமலை மாவட்டத்தில் ,கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள துவரங்குளம் பெய்த கடும் மழையால் குளத்தின் ஆணைக் கட்டுக்களில் இரு பக்கங்களும் அரிப்பெடுத்துள்ளதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் குளம் கிண்ணியா பிரதேசத்தில் நடுஊற்று, மற்றும் சூரங்கல் , ஆயிலியடி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் மையப் பகுதியில் அமைந்துள்ளன.

இக்குளம் கடந்த ஓரிறு முன்னரே கொந்தரத்துக் காரர்களால் நிர்மாணப் பணிகள மான்னேடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் துவரங்குளத்தின் தற்போதைய நிலையில் இதனது நிர்மான வேலைகள் முடிவடைந்து விட்டதா? இல்லை என்றால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளதா?

இந்த குளம் வருகின்ற மழை காலத்தில் அழிந்து விடாமல் நிலையாக இருக்குமா?

இக் குளத்தை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரம் எவ்வாறு இருக்கப் போகின்றது? என் மக்கள் அங்கலாயிக்கின்றனர்.

# அறங்காவலர் ஒன்றியம் உலருணவு விநியோகம்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு அறங்காவலர் ஒன்றியம் சமகால கொரோனா ஊரடங்கு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு நேற்று உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

காரைதீவிலுள்ள சகல ஆலயபங்களில் வைத்து இவ் விநியோகம் இடம்பெற்றது.

அறங்காவலர் ஒன்றிய தலைவர் இரா. குடிக்கும் செயலாளர் சி. நந்தேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்கள் உலருணவு பொதிகளை வழங்கிவைத்தனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணராக வைத்தியர் எம்.என்.என்.எம். சஹீர்



(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணராக வைத்தியர் எம்.என்.என்.எம். சஹீர்; நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையினை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் முன்னிலையில் நேற்று கடமையினை பொறுப்பேற்றார்.

பல்வேறு வைத்தியசாலைகளில் கடமையாற்றிய இவர் இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார்.

இதன் மூலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நீண்டகாலம் மயக்க மருந்து நிபுணர் இல்லை எனும் குறைபாடு நிவர்த்திக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை அட்டகாசத்தால் சேதம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமால - தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இக்பால் நகர் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானை பல சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானை தென்னை, வாழை மரவெள்ளி , நிலக்கடலை முதலான பயிர்களை துவசம் செய்துள்ளது.

இதேவேளை பயிர்களைப் பாதுகாப்பதற்காக கட்டப்பட்ட பாதுகாப்பு வேலிகளையும் நாசப் படுத்தியுள்ளதாகக் கூறுகின்றார்.சுமார் 30 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை ஒவ்வொரு நாளும் நடப்பதாகத் தெரிவிக்கின்றனர்.இரவில் தூங்குவது பயமாக இருப்பதாகவும் சிறு குழந்தைகளை வைத்திருப்பது கஸ்டமாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

காட்டுக்குச் சென்ற விறகு எடுப்பதும், இரவு நேரங்களில் தேவை கருதி வெளியில் செல்லவும் முடியாதுள்ள தாகவும் தெரிவிக்கின்றனர்.இக்கிராமத்தில் யானை பாதுகாப்பு வேலி ஒன்றை அமைத்துத் தருமாறும் கேட்கின்றனர்.

# பொத்துவில் பிரதேசத்தில் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கான கொவிட் தடுப்பூசி செலுத்துல்



(எம்.ஏ.றமீஸ்)

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யு.அப்துல் சமட் தலைமையில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில்; அமைக்கப்பட்டுள்ள நான்கு மத்திய நிலையங்களில் இத்தடுப்பூசிகள் ஏற்றிக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது இருபது வயது முதல் முப்பது வயதிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் கொவிட் தடுப்பூசிகளை செலுத்தி வருகின்றனர். இத்தடுப்பூ செலுத்தும் நடவடிக்கையானது அரசாங்கத்தின் முன்மாதிரியான வேலைத்திட்டம் எனவும் இதற்கு தாம் பூரண ஒத்துழைப்புகளை வழங்கி வருவதோடு, தடுப்பூசி செலுத்துவதன் மூலமே கொரோன வைரசினை உலகிலிருந்து அழிக்க முடியுமெனவும் இளைஞர் யுவதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பாரிய விபத்து

(ரக்ஸனா)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படை முகாம் முன்னால் திங்கட்கிழமை (20) அதிகாலை 5 மணியளவில் பாரிய விபத்துச் சம்பவம் ஒன்று சம்பவித்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது;

திருகோணமலை கிண்ணியா பகுதியிலிருந்து மீன்களை ஏற்றிக் கொண்டு கல்முனை பகுதி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வட்ட ரக வாகனவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் பயணித்த எவருக்கும் எதுவித சேதமும் ஏற்படாமல் தெய்வாதீனமாக உயிர் உயிழைத்துள்ளதாகவும், நான் ஒன்று குறுக்கீடு செய்ததில் இவ்விபத்து ஏற்பட்டதாகவும், அதில் பயணித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் வாகனம் பெரிதும் உடைந்து பழுதடைந்துள்ளதுடன், அதில் ஏற்றிக்கொண்டு சென்ற பெருமளவான மீன்ளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன. இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் உடன் இஸ்த்தலத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு

(ஐ.ஏ.ஸிறாஜ்)

பாலமுனை ஹெல்த் போரம் மற்றும் பாலமுனை ஜெம்மியத்துல் உலமா சபையின் ஏற்பாட்டில். றம்ய லங்கா மற்றும் மேமன் எய்ட் அமைப்புக்களின் அனுசரணையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு நேற்று (19) பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லலூரியில் இடம்பெற்றது.

பாலமுனை ஹெல்த் போரத்தின் தலைவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியுமான எஸ்.எம்.றிபாஸ்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜெம்மியத்துல் உலமா சபையின் பிரதி தலைவரும் பாலமுனை ஜெம்மியத்துல் உலமா சபையின் ஆலேசகருமான அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாசிம் (மதனி) உட்பட ஹெல்த் போரத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள் இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பாலமுனை ஹெல்த் போரத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரத்ததானம் வழங்கும் உயரிய பணியில் 18 வயதுக்கு மேற்பட்ட பிரதேசத்திலுள்ள அனைத்து இளைஞர் யுவதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டிருந்தனர். இதற்கமைவாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர். இதன் போது இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டு உதிரம் வழங்கிய அனைவருக்கும் மேமன் எய்ட் அமைப்பினால் வழங்கப்பட்ட போசனை உணவுகள் அடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருமலையில் இடம்பெற்ற வீதி விபத்தில் நான்கு பேர் படுகாயம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை-ஹொரவ்பொத்தானை பிரதான வீதி சாந்திபுரம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளொன்று சென்று கொண்டிருந்த போது பின்புறமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது.

இவ் விபத்தின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர்கள் படுகாயமடைந்துள்ள நிலையில் மற்றைய சைக்கிளில் பயணித்த நபரும் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் படுகாயமடைந்த 4 பேரும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இருவரை அனுப்பி வைத்துள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் மஹதிவுல்வெவ- புபுது புற பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையான பீ.ஜீ. சாந்த குணரத்ன (45வயது) அவரது மனைவியான பீ.ஜீ.விமலா ரஞ்சனி (42வயது) மற்றும் மகனான ரிவிது சதுஸ்க (15வயது) ஆகியோர் காயமடைந்துள்ளதாகவும் இதேவேளை மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான ஏ.எம்.சந்ரசேன (52வயது) ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இரண்டு சாரதிகளும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

ஆனாலும் குறித்த விபத்துடன் தொடர்புடைய நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் விபத்து தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள் மற்றும் ஆவணங்களை துரித வேகத்தில் உரிய முகவரியில் கொண்டு சேர்க்க இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIANFOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH




# குப்பையில் சிக்கிய முகவர்களினால் கல்முனை மாநகரில் சிலர் மீது அதிரடி சட்ட நடவடிக்கை



(நூருல் ஹுதா உமர்)

கல்முனைமாநகர சபையினால் தொடர்ந்தும் வலியுறுத்திவந்த பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவது மற்றும் பொது மக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் பிரதான வீதிகள், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தொடர்ந்தும் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக கிடைத்த தகவலை அடுத்து அந்த குப்பைகளில் இருந்து பெறப்பட்ட முகவரிகளை அடிப்படையாக கொண்டு அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க உள்ளோம் என கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் பேசுபொருளாக மாறியிருந்த குப்பைகளினால் மக்கள் அசௌகரியம் எனும் இவ்விவகாரத்திற்கு தீர்வு காணும் நோக்கில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். ரக்கிபின் ஆலோசனையின் பேரில் கள விஜயம் செய்த டாக்டர் அர்சத் காரியப்பர் தலைமையிலான சுகாதார குழுவினர் அந்த குப்பைகளை அகற்றிய போது அந்த குப்பைகளிலிருந்து மின்சார சபை நிலுவைப் பட்டியல், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை நிலுவைப் பட்டியல், டெலிகொம் நிலுவைப் பட்டியல் உட்பட முகவரி அச்சிடப்பட்ட ஆவணங்களை கைப்பற்றினர். குப்பைகள் கொட்டப்பட்ட 23 இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கல்முனையில் இருந்து 20 பேரின் முகவரியும், சாய்ந்தமருதில் இருந்து 23 பேரும், மருதமுனையில் இருந்து 18 பேரும், நற்பிட்டிமுனையில் இருந்து 17 பேருமாக அந்த முகவரிகளை அடிப்படையாக கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளானர். அந்த 78 பேருக்கும் எதிராக பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்தமைக்காக நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த போவதாக அங்கு கருத்து தெரிவித்த போது பிரதம சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். இங்கு கல்முனை மாநகர சபை சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

(க.கிஷாந்தன்)

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டவளை லொனக் பாற்பண்ணை அணைக்கட்டில் நீராட சென்று நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை தோட்டத்தை சேர்ந்த 38 வயதுடைய சின்னையா ராஜா, புத்தளம் ஹலாவத்தை பகுதியை சேர்ந்த 21 வயதுடைய சச்சிந்த தில்ஷான் ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை லொனக் பாற்பண்ணைக்கு சொந்தமான அணைக்கட்டு ஒன்றில் நேற்று மாலை 5 மணியளவில் ஐந்து இளைஞர்கள் நீராடச் சென்றுள்ளனர். நீராடிக் கொண்டிருந்த போது, இதில் இருவர் நீரில் இழுத்து செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதன்போது சின்னையா ராஜா என்ற இளைஞன் நீரில் மூழ்கிய போது, சஜிந்த டில்சான் என்பவர் அவரைகாப்பாற்றுவதற்கு முற்பட்ட வேலையில் இருவரும் நீரில் மூழ்கியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அதற்கமைய, அவர்களை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 19.09.2021 அன்று மாலையே தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 20.09.2021 அன்று திங்கட்கிழமையே அவர்களிருவரது சடலங்களும் மீட்கப்பட்டிருந்தன. இராணுவத்தினரும், பொது மக்களும் இணைந்தே சடலங்களை மீட்டுள்ளனர். இவர்கள் கட்டிட நிர்மாண பணிகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைகளுக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தடுப்பூசி ஏற்ற இளைஞர்கள் மும்முரம்



(எம்.ஐ.எம்.றியாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 வயது முதல் 29 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்வதற்காக நேற்று மும்முரமாக கலந்து கொண்டனர். சுகாதாரப் பிரிவில் வசிக்கும் 8 ஆயிரம் இளைஞர்களுக்கு கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் வழி நடத்தலின் மூலம் கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் ஆறு மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் (20.09.2021) தீகவாபி வைத்தியசாலை, அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பாலமுனை அல்-ஹிதாயா மகளீர் கல்லூரி, ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம் அகிய மையங்களில் கொவிட் 19 தடுப்பூசிகள் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையும் ஏற்றப்பட்டன.

குறிப்பிட்ட காலத்தில் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, தீகவாபி ஆகிய இப்பிரதேசங்களில் வசிக்கும் 8 ஆயிரம் இளைஞர்களுக்கு கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தவறவிடாது நேரகாலத்தோடு முன்வந்து தத்தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றும் மையங்களுக்குச் சென்று தமக்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் இதன் போது கேட்டுக் கொண்டார்.

இத்தடுப்பூசி ஏற்றும் பணிகளில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஈ.எல்.சலீம், பொது சுகாதாரப் பரிசோதகர் எம்.எம்.ஜெசீர், எம்.பீ.மிஹியார், எம்.ஏ.ஏ.ஜப்பார், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் 24 வீடுகள் நிர்மாணம்

(சம்மாந்துறை நிருபர்)

கிராமிய வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் கட்டிட பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதியுதவியின் கீழ் மீள்குடியேற்றப்பட்ட பயனாளிகளுக்கு அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் 24 வீடுகள் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வீடுகள் நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்திற்கு அமைய பயனாளிகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கும் நிகழ்வும் மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்வும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம் ஹனிபா தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்விற்கு அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பமாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் சம்மாந்துறை - 12, மல்வத்தை - 02 மற்றும் வீரமுனை - 01 மீள்குடியேற்ற கிராம சேவகர் பிரிவுகளில் நடைபெற்றது.

மேலும் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில்

2021 ஆம் ஆண்டிற்கு மல்வத்தை 01-09, மல்வத்தை 02 - 03, வீரமுனை 01 - 09, வீரமுனை 04 - 01, சம்மாந்துறை 12 - 02 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகள் கட்டுமான பணிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் செலவில் 17 வீடுகளும் ஆறு இலட்சம் செலவில் 07 வீடுகளும் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.ஏ. மஜீட் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. அலியார் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் , கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் மற்றும் சிறுவர் நட்பு நிலையம் திறந்து வைப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



மூதூர் பிரதேச செயலகத்தில் மகளிர் மற்றும் சிறுவர் நட்பு நிலையம் அண்மையில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் ஆகிய கபில நுவன் அத்துக்கோரளவினால் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்படுகின்ற மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை சுமுகமாக தீர்த்து இணக்கமான முறையில் வாழ வைப்பதே இந் நிலையத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, பிரதேச அரசியல் தலைமைகள், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் அரசஅதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

# மகிழவட்டவானில் சக்தி வாய்ந்த குண்டு மீட்பு

( வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு ,ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழவட்டவான் பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் குண்டொன்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்

தனியார் காணியென்றில் நீர் குழாய் பதிக்கும் நடவடிக்கைக்காக குழி தோண்டும்போது மண்ணில் இருந்து சக்தி வாய்ந்த மோட்டார் குண்டு ஒன்று வெளி வந்ததையடுத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இக்காணியில் கடந்த யுத்தகாலத்தில் பாதுகாப்பு படையினர் முகாம் அமைத்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

மேற்படி குண்டை அகற்றும் பொருட்டு குண்டு செயலிழக்கும் படைப்பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸ் நிலைய விஷேட புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் காதரின் தாயார் காலமானார்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவருமான பி.எம். எம்.ஏ. காதர் அவர்களின் தாயார் இஸ்மாலெப்பை ஆமினா உம்மா, வயது 84 நேற்று அனுராதபுரம் கஹடகஸ்திகிலியவில் காலமானார்.

நான்கு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் என ஏழு பிள்ளைகளின் தாயான இவருக்கு பி.எம்.எம்.ஏ.காதர் இரண்டாவது புதல்வராவார். அனுராதபுரம் கஹடகஸ்திகிலியவில் வசித்து வந்த நிலையில் சில நாட்களாக சுகவீனமுற்றிருந்த நிலையில் இவர் காலமானார். அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் இன்று (20) அஸர் தொழுகையைத் தொடர்ந்து கஹடகஸ்திகிலிய புதுவளவு மையவாடியில் இடம்பெற்றது

# நடமாட்டத் தடையால் வாழ்வாதாரம் இழந்த 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

(ரக்ஸனா)

கொரோனா தாக்கத்தால் அன்றாடம் நாட்கூலி வேலைசெய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தமது குடும்பங்களைப் பாதுகாத்துவரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட எருவில், பட்டிருப்பு, குருமண்வெளி உள்ளிட்ட பகுதிகளில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றுமு; முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் உள்ளிட்ட 300 குடும்பங்களுக்கும், சனிக்கிழமை (18) அரிசி, மற்றும் மரக்கறி உள்ளிட்ட உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான மேகசுந்தரம் வினோராஜ் அவர்களின் சொந்த நிதியில் இருந்து இந்த உலர் உணவுப் பொருட்களை அவர் வழங்கி வைத்துள்ளார்.

கொரோனா அச்சத்தின் காரமாக மக்கள் வருமானமின்றி இன்னலுறும்போது எமது நிலமை அறிந்து தாமாக முன்வந்து மனமுவந்த காலடிக்கே கொண்டுவந்து உலர் உணவுப் பொருட்களை வழங்கிய மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உறுப்பினர் மே.வினோராஜ் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றிளைத் தெரிவித்துள்ளனர்.

